INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி மலர்

## மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்ச்சி இதழ்

✦ மொட்டு 16 ✦ மலர் 44 ✦ டிசம்பர் 2022 - மார்ச் 2023
-தனிச்சுற்றுக்கு மட்டும்-



2022 ஆம் ஆண்டில்
**5543 குழுக்களிலுள்ள**
**98865 உறுப்பினர்கள்**
பெற்ற

# இலாபப் பங்கீடு

# ₹ 89.35 கோடி

# நிறுவனர் இதயத்திலிருந்து



அன்பார்ந்த உறுப்பினர்களே! ஊக்குனர்களே!

## வாழ்த்துக்களும், வணக்கங்களும்!

புத்தாண்டில் புத்தெழுச்சியுடன் பணிகளைத் துவக்கியுள்ள நாம் நம்முடைய பணிகளை மேலும் செம்மைப்படுத்துவதில் எப்போதும் கவனத்தைச் செலுத்தி வந்துள்ளோம். மகளிரை விழிப்புணர்வு அடைய செய்வதிலும், அவர்களைப் பொருளாதார ரீதியாக சுதந்திரம் அடைய வைப்பதிலும் ஐ.வி.டி.பி எப்போதும் ஓய்ந்ததில்லை. எனவே தான் தற்போது நம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பெறும் கடன் தொகையை உயர்த்தியுள்ளோம். அது அவர்களின் பல பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் என்பதில் ஐயமில்லை.

மேலும் நம் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் உடல் நலன் தொடர்பாக ஐ.வி.டி.பி முன்னெடுத்திருக்கும், புற்றுநோயைத் துவக்க நிலையிலேயே கண்டறிதல் மற்றும் மகளிர் நலன் தொடர்பான முகாம்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இம்முகாமில் பங்கேற்று தங்களைச் சோதனைக்கு உட்படுத்தி பல உறுப்பினர்கள் தங்கள் உடல் நலன் தொடர்பான பிரச்சனைகளை முதன்முறையாக தெரிந்து கொள்வது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக நான் இம்மலர் வாயிலாக உங்களுக்கு ஒரு வேண்டுகோளையும் விடுக்க விளைகிறேன். **“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”** என்ற முதுமொழிக்கேற்ப, உங்கள் உடல் நலனில் போதிய கவனம் செலுத்துங்கள். உங்கள் உடலில் ஏற்படும் அசாதாரண மாற்றங்களை உடனடியாக உங்கள் குடும்பத்தாரோடு

உள்ளே...




இலாபப் பங்கீடு 04





வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி 05





உங்களின் ஆரோக்கியம்! எங்களின் நிம்மதி! 08

அல்லது உங்களுக்கு நெருக்கமானவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். உடனடியாக சிகிச்சைக்கு செல்லுங்கள். ஏனெனில் ஒரு சில நோய்களுக்கு காலம் கடந்து சிகிச்சை மேற்கொள்வதால் எவ்வித பயனுமில்லை.

**நம் பணியாளர்களின் அயராத உழைப்பின் விளைவாக நமது சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை 15,794 ஆகவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 2,79,992 ஆகவும் உயர்ந்துள்ளது. சென்ற நிதியாண்டில் நம் உறுப்பினர்கள் ரூ.912.63 கோடி வங்கிக் கடனாகவும், ரூ.356.69 கோடி சங்கக் கடனாகவும், ரூ.52.07 கோடி ஐ.வி.டி.பி கடனாகவும், ரூ.13.45 கோடி சுகாதாரக் கடனாகவும் என மொத்தம் ரூ.1334.84 கோடி கடன் சுழற்சி செய்து, தங்களின் தேவைகளை நிறைவு செய்து கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.**

தற்போது ஒரு கல்வியாண்டு முடிவடையும் நிலையில், உங்கள் குழந்தைகள் தேர்வுகளை நிறைவு செய்து அடுத்த நிலைக்கு செல்ல உள்ளனர். குழந்தைகளை ஊக்குவித்து, அவர்களின் கல்வியில் கவனம் செலுத்துங்கள்.

**கடந்த ஆண்டுகளைப் போல் இவ்வாண்டும் ரூ.89.35 கோடியை நம் உறுப்பினர்கள் இலாபப் பங்கீடாகப் பெற்று பயனடைந்துள்ளனர்.** வரும் ஆண்டுகளில் மேலும் பல உறுப்பினர்கள் இலாபப் பங்கீடு பெற வாழ்த்துகிறேன். இறுதியாக நம் குழுக்கள் அனைத்தும் உள் மற்றும் வெளித் தணிக்கையில் ஈடுபட்டுள்ளன. தணிக்கைகளைச் சிறப்பாக நிறைவு செய்து, நாம் செய்த குறை நிறைகளை அறிந்து கொண்டு நம் குழுக்களை மேலும் செம்மைப்படுத்துவோம். அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

உங்களில் ஒருவனாக...

இராமன் மகசேசே
**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர் / தலைவர்






ஐ.வி.டி.பி.யின் கல்விப் பணிகள் 09
ஐ.வி.டி.பி.யின் கல்விச் சேவைகள் 16
ஐ.வி.டி.பி.யின் சமூகப் பணிகள் 26
கவிதைத் துளிகள் 27



2022ஆம் ஆண்டு ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பெற்ற

# இலாபப் பங்கீடு

## ₹ 89.35 கோடி

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேமித்து வருகின்றனர். அங்ஙனம் சேமித்தத் தொகைக்கு ஏற்றவாறு குறைந்த வட்டியில் உள்கடனைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். அந்த கடனிற்கு பெற்ற வட்டியானது குறிப்பிட்ட கால இடைவெளியில் குழு உறுப்பினர்களுக்கு இலாபமாக பங்கிடப்படுகிறது. இதுவே இலாபப் பங்கீடாகும். அங்ஙனம் **2022 ஆம் ஆண்டில் 5543 குழுக்களிலுள்ள 98865 உறுப்பினர்கள் ரூ. 89.35 கோடியை இலாபப் பங்கீடாகப்** பெற்று பயனடைந்துள்ளனர்.

உபரி சேமிப்பு மற்றும் இலாபப் பங்கீடு பெற்ற மொத்த குழுக்கள்
**5543**

உபரி சேமிப்பு ₹ 94.48 கோடி
+
இலாபப் பங்கீடு ₹ 89.35 கோடி

மொத்தம்
**₹ 183.83 கோடி**

இதுவரை வழங்கப்பட்ட மொத்த இலாபப் பங்கீடு **ரூ. 816.35 கோடி**



"யாரும் உன்னை நம்பாவிட்டாலும் பரவாயில்லை, நீ உன்னை கடைசிவரை நம்ப வேண்டும்."

மறைந்த ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களின்
வாரிசுதாரர்களுக்கு

# வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

# ₹ 6.63 கோடி



ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் நலன்களுக்காக செயல்படுத்தி வரும் திட்டங்களில் முதன்மையானது வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி வழங்கும் திட்டமாகும். இத்திட்டத்தின்படி பல்வேறு காரணங்களால் எதிர்பாராமல் மரணமடையும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா **ரூ.50,000/-**மும், விபத்தினால் நிரந்தர உடல் ஊனமுற்றோருக்கு தலா **ரூ.25,000/-**மும், வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படுகிறது. மேலும் உறுப்பினர்கள் மரணமடையும் போது அவர்களின் ஈமச் சடங்கிற்காக குழு நிதியிலிருந்து **ரூ.5,000/-** உடனடியாக வழங்கப்படுகிறது.

**அதன்படி கடந்த 2022 ஆம் ஆண்டு ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களிலிருந்து பல்வேறு காரணங்களினால் மரணமடைந்த 1205 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கும், 2 நிரந்தர உடல் ஊனமுற்றோருக்கும், ரூ.6.63 கோடி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி**யாக வழங்கப்பட்டது. இந்நிதி மறைந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலாகவும், அவர்களுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடுகட்டவும் பயன்படுகிறது.




18.02.2023 அன்று நடைபெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி வழங்கும் நிகழ்வில் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் தலைமை வகிக்க, சென்னை பேங்க் ஆப் பரோடா பொது மேலாளர் திரு.**சரவணக்குமார்** அவர்களும், இந்தியன் வங்கியின் தருமபுரி மண்டல துணை பொது மேலாளர் திருமதி. **பத்மாவதி** அவர்களும், சுண்டம்பட்டி புனித அந்தோணியார் திருத்தல பங்கு பணியாளர் அருட்பணி. **ஜார்ஜ்** அவர்களும், புதுச்சேரி பேங்க் ஆப் பரோடா வட்டார மேலாளர் திரு. **கமலக்கண்ணன்** அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துக் கொண்டு வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியுதவியை வழங்கினர்.

**இத்திட்டம் துவங்கப்பட்ட 2001 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மறைந்த 10808 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 53.99 கோடி**யை வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கியுள்ளது .



"முதலில் மாற்றம் கடினமாக தான் இருக்கும் அதன் பிறகு குழப்பமாகத்தான் இருக்கும்
ஆனால் இறுதியில் அம்மாற்றம் அற்புதமாக இருக்கும்."

ஐ.வி.டி.பி. பணியாளர்களுக்கு

# புத்தாண்டு பரிசு

₹ 9.97 இலட்சம்




ஆண்டுதோறும் ஆண்டின் முதல் நாள் பணியாளர்கள் தினமாக சிறப்பிக்கப்படுகிறது. அவ்வகையில் 2023 ஆம் ஆண்டின் புத்தாண்டு தினத்தில் சிறப்பிக்கப்பட்ட விழாவில் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் அறுசுவை உணவோடு பணியாளர்கள் தினம் சிறப்பிக்கப்பட்டது. அப்போது **440 பணியாளர்களுக்கு ரூ 2,27,874/- மதிப்பிலான இனிப்புகள் (கேக்)** மற்றும் **360 பணியாளர்களுக்கு தலா ரூ. 2,137/- என மொத்தம் ரூ.7,69,320/-** மதிப்பிலான **தலையணை படுக்கை விரிப்புகள் ஆகியவற்றை** புத்தாண்டு பரிசுகளாக ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் வழங்கினார்.

ஐ.வி.டி.பி. பணியாளர்களுக்கு

# பொங்கல் பரிசு

₹ 3.83 இலட்சம்

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், தமிழர் திருநாளான பொங்கல் விழாவை முன்னிட்டு, ஆண்டுதோறும் தனது பணியாளர்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இவ்வாண்டும் பொங்கல் விழாவின் போது **440 பணியாளர்களுக்கு ரூ. 3.23 இலட்சம் மதிப்பிலான பொங்கல் தொகுப்பு மற்றும் ரூ. 60 ஆயிரம் மதிப்பிலான கேக்குகள்** வழங்கப்பட்டது.






"உங்கள் மீது எறியும் கற்களை ( தடை) நீங்கள் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள் அதை வைத்து நீங்கள் உங்களுக்கான நினைவுச் சின்னத்தை (சாதனை) எழுப்புங்கள்."



# தையற்பயிற்சி, ஆரி வேலைபாடு பயிற்சியை நிறைவு செய்த உறுப்பினர்களுக்கு சான்றிதழ்கள்

ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்தும் விதமாக ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் இதுவரை நடைபெற்ற **அடிப்படை தையற் பயிற்சியில் 270 உறுப்பினர்களும், ஆரி வேலைபாடுகள் பயிற்சியில் 68 உறுப்பினர்களும்** பயிற்சியை நிறைவு செய்த நிலையில், அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார் ஐவிடிபி நிறுவனத் தலைவர்.

தற்போது நடைபெற்று வரும் பத்தாம் கட்ட **அடிப்படை தையற் பயிற்சியில் 30 பேரும், ஆரி வேலைபாடு பயிற்சியில் 30 பேரும்** பயிற்சி பெற்று வருகின்றனர்.



# உங்களின் ஆரோக்கியம்! எங்களின் நிம்மதி!

## தலையணை பற்றி ஆய்வு



ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பரவலாக பயன்படுத்தும் தலையணைகள் பற்றிய ஆய்வை மேற்கொண்ட நமது ஐ.வி.டி.பி நிறுவனம், அவர்கள் சுத்தமான சுகாதாரமான முறையில் உறங்குவதை உறுதி செய்யும் பொருட்டு குறைந்த விலையில் சிறந்த தொழில்நுட்பத்தோடு தயாரிக்கப்பட்ட உயர்தரமான தலையணைகள், தனது உறுப்பினர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்துள்ளது.

அவ்வகையில் **தலா ரூ. 900/-** மதிப்பில் 2 தலையணை மற்றும் தலையணை உறைகளை ஐ.விடி.பி நிறுவனம் முதற்கட்டமாக ஐ.வி.டி.பி பணியாளர்களுக்கு வழங்கியது. அதன் தொடர்ச்சியாக ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களும் அதே தரத்திலான தலையணைகளைப் பெறும் வகையில் ஏற்பாடு செய்துள்ளது.

### தலையணை பயன்படுத்துவதின் பயன்கள்

- மனிதன் உறங்கும் போது, முதுகெலும்பை நேராகவும் சமநிலையுடனும் வைக்க உதவுகிறது.
- தலையை உடலின் பிற பாகங்களோடு நேர்பாடான முறையில் வைத்து உறங்க உதவுகிறது.
- ஒரே சீரான முறையில் உடலின் பாகங்களை வைத்து உறங்க உதவுகிறது.
- கழுத்துப் பகுதியில் ஏற்படும் வலிகளைக் குறைத்து சீராக உறங்க உதவுகிறது.



☒ தலையை ரொம்ப உயரமாக வைத்து படுத்தல்

☒ தலையை ரொம்ப கீழாக வைத்து படுத்தல்

☑ தலையை சரியான பகுதியில் வைத்து படுத்தல்

### சரியான தலையணை பயன்படுத்துவதின் தேவைகள்

- கடினமான பொருட்களை கொண்டு உருவாக்கப்பட்ட தலையணைகளினால் ஏற்படும் தலைவலி மற்றும் கழுத்து வலிகளைத் தவிர்த்தல்.
- அழுக்கடைந்த துணிகள் மற்றும் இதர பொருட்களைத் தலையணையாக பயன்படுத்துவதால் ஏற்படும் பூஞ்சை போன்ற நோய் தொற்றுகளைத் தவிர்த்தல்.
- சீரற்ற வடிவிலான தலையணையால் ஏற்படும் தூக்கமின்மையைத் தவிர்த்து நல்ல சுகமான ஆழ்ந்த தூக்கத்திற்கு உதவுகிறது.

**குறிப்பு : தலையணையின் மாதிரிகள் அனைத்து கிளை அலுவலகங்களிலும் உறுப்பினர்களின் பார்வைக்கு கிடைக்கும்.**

தலையணை விலைப் பட்டியல்

| | |
|---|---|
| ஒரு தலையணையின் அதிகபட்ச விற்பனை விலை | ₹ 639 |
| ஐவிடிபி குழுக்களுக்கான சிறப்புத் தள்ளுபடி | ₹ 284 |
| ஐவிடிபி குழுக்களுக்கு வழங்கப்படும் விலை | ₹ 355 |

தலையணை உறை விலைப் பட்டியல்

| | |
|---|---|
| இரண்டு தலையணை உறைகளின் அதிகபட்ச விற்பனை விலை | ₹ 339 |
| ஐவிடிபி குழுக்களுக்கான சிறப்புத் தள்ளுபடி | ₹ 149 |
| ஐவிடிபி குழுக்களுக்கு வழங்கப்படும் விலை | ₹ 190 |
| ஒரு தலையணை உறையின் விலை | ₹ 95 |



நேற்றைய ஒரு விஷயம் உன்னால் செய்ய முடியவில்லை என்றால்
அது இன்றைக்கும் செய்ய முடியாதது என்று அர்த்தமில்லை.

## வேலூர் அக்சீலியம் கல்லூரிக்கு

# வெளிப்புற LED திரை & உணவு ₹ 5.31 இலட்சம்

வேலூர் அக்சீலியம் கல்லூரி மாணவிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், கல்லூரி நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அக்கல்லூரியின் வணிக நிர்வாகத் துறையின் வெள்ளி விழாவை முன்னிட்டும், **ரூ. 6.51 இலட்சம்** மதிப்பிலான **வெளிப்புற LED திரை** வழங்கப்பட்டது.

இதில் ஐ.வி.டி.பி யின் பங்களிப்பாக வெளிப்புற **LED** திரைக்கு **ரூ. 3.59 இலட்ச**மும், கல்லூரி நிர்வாத்தின் பங்களிப்பாக **ரூ. 3.59 இலட்ச**மும், வழங்கப்பட்டது. மேலும் வணிக நிர்வாகத் துறையின் **700 மாணவிகள் மற்றும் அனைத்து பேராசிரியர்களுக்கும் ரூ. 1.72 இலட்சம் மதிப்பிலான உணவு மற்றும் கேக்குகளையும்** வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்




# தருமபுரி தொன் போஸ்கோ கல்லூரி பேராசிரியர்களுக்கு TAB

## ₹ 4.60 இலட்சம்




தருமபுரி தொன் போஸ்கோ கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கற்றல் முறையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், அக்கல்லூரியில் தொடர்ந்து 7 வருடங்களுக்கு மேலாக பணிபரியும் 31 பேராசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில், **ஐவிடிபி நிறுவனத்தின் பங்களிப்பாக 16 பேராசிரியர்களுக்கு ரூ. 4.60 இலட்சம்,** கல்லூரி நிர்வாகத்தின் பங்களிப்பாக **15 பேராசிரியர்களுக்கு ரூ. 4.32 இலட்சம் என மொத்தம் ரூ. 8.92 இலட்சம்** மதிப்பிலான பல்வேறு நவீன வசதிகள் கொண்ட TABகள் வழங்கப்பட்டது. இந்த TAB உபகரணத்தைப் பயன்படுத்தி பேராசிரியர்களின் கற்பித்தல் பணியை எளிமையாக்க இயலும் என்பது குறிப்பிடத்தக்கது.




## கிருஷ்ணகிரி மாவட்ட அரசு பள்ளிகளுக்கு

# ஸ்மார்ட் டிவி

₹ 66 இலட்சம்

அரசுப் பள்ளிகளில் மாணவ மாணவியரின் கற்றல் திறனை மேம்படுத்தவும், ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் பணியை நவீன கால மாற்றத்திற்கேற்ப ஒலி, ஒளி வடிவில் புதுமையான முறையில் மேற்கொண்டு மாணவர்களின் கற்றல் அனுபவத்தை இனிமையாக்கும் பொருட்டு மாநிலத்திலேயே முன்னோடி திட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படும் துவக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 43" அகன்ற ஸ்மார்ட் தொலைகாட்சி பெட்டி வழங்கும் திட்டத்தை ஐ.வி.டி.பி நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

அதன்படி முதற்கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளிகளுக்கு ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பங்களிப்பாக **ரூ.66 இலட்சம்** மதிப்பிலான 211 ஸ்மார்ட் டிவிக்கள், பள்ளிகளின் பங்களிப்பாக **ரூ.66 இலட்சம்** மதிப்பிலான 211 ஸ்மார்ட் டிவிக்கள் என மொத்தம் **ரூ. 1.32 கோடி மதிப்பிலான 422 ஸ்மார்ட் டிவிக்களை (43" LED TV)** மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. மகேஷ்வரி அவர்கள் முன்னிலையில், பள்ளி தலைமையாசிரியர்களிடம் வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

## திருப்பத்தூர் மேரி இமாகுலேட் தொடக்கப் பள்ளிக்கு

# ஸ்மார்ட் டிவி ₹ 4.72 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம், திருப்பத்தூர் நகரில் கல்விப் பணியில் சிறப்புறச் செயலாற்றி வரும் மேரி இமாகுலேட் தொடக்கப் பள்ளியின் பயன்பாட்டிற்காக **ரூ. 4.72 இலட்சம் மதிப்பிலான 15 ஸ்மார்ட் (43" LED TV)** தொலைக்காட்சி சாதனங்களை வழங்கியது. இச்சாதனங்கள் வாயிலாக மாணவ மாணவியர் ஆர்வமுடன் கல்வி பயின்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.





"பயம் ஒரு அற்புதமான விஷயம் ஏனெனில் அதை நோக்கி நீங்கள் ஓடினால் அது உங்களை விட்டு தூரமாக ஓடிவிடும்"




# மான்போர்ட் சிறப்பு பள்ளி மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள்

₹ 11 இலட்சம்

கர்நாடகா மாநிலம், மைசூர் அருகேயுள்ள பெலகோலா பகுதியில் செவித்திறன் குறைந்த மற்றும் பேசும் திறனற்ற மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக இயங்கி வரும் மான்போர்ட் சிறப்பு பள்ளியில் 120 க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயின்று வருகின்றனர்.





அவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டும், அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் அப்பள்ளியில் பயிலும் **120 மாணவ-மாணவியருக்கு கல்வி உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள், படுக்கை விரிப்புகள், தலையணைகள், போர்வைகள், காலணிகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான பொருட்கள்** என மொத்தம் **ரூ. 11 இலட்சம்** மதிப்பிலான பொருட்களையும் உபகரணங்களையும் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.







"வீணாக மற்ற விஷயங்களில் நேரத்தை செலவிடாதீர்கள் உங்களுக்கு என்ன பிடித்து இருக்கிறது அதில் உங்கள் முழு ஈடுபாடுடன் நேரத்தை செலவிடுங்கள்."



## பெற்றோர்களை இழந்த & வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் கல்லூரி மாணவ மாணவியருக்கு

# உயர்கல்வி உதவித்தொகை

## ₹ 46.14 இலட்சம்

ஐ.வி.டி.பி யின் கல்விப் பணிகளில் முதன்மையானது பெற்றோரை இழந்த கல்லூரி மாணவ மாணவியருக்கு உயர் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டமாகும். அவ்வகையில் பெற்றோர் இருவரையும் இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 10,000/- பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கு தலா ரூ. 7,500/- என வழங்கி வருவதோடு, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிறப்பு கல்வி உதவித்தொகையாக தலா ரூ. 7,500/- என கல்வி உதவித் தொகைகளை வழங்கி வருகிறது ஐ.வி.டி.பி நிறுவனம். அதன்படி கீழ்க்கண்ட கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

- **வேட்டவலம், இலயோலா கல்லூரியின் 220 மாணவர்களுக்கு**
  **₹ 16.52 இலட்சம்**
- **ஒசூர், செயின்ட் ஜோசப் கல்லூரியின் 101 மாணவியருக்கு**
  **₹ 7.7 இலட்சம்**
- **எலத்தகிரி, கொன்சாகா கல்லூரியின் 61 மாணவியருக்கு**
  **₹ 4.8 இலட்சம்**
- **ஏலகிரி, தொன் போஸ்கோ கல்லூரியின் 58 மாணவர்களுக்கு**
  **₹ 4.42 இலட்சம்**
- **ஓமலூர், பாகல்பட்டி செயின்ட் ஜோசப் கல்லூரியின் 40 மாணவியருக்கு**
  **₹ 1.5 இலட்சம்**
- **பர்கூர், செயின்ட் ஜோசப் உடல் மற்றும் சமூக நல மையத்தின் 36 மாணவர்களுக்கு**
  **₹ 3.6 இலட்சம்**
- **திருப்பத்தூர், தூய நெஞ்சக் கல்லூரியின் 60 மாணவர்களுக்கு**
  **₹ 3 இலட்சம்**
- **மெட்டாலா, இலயோலா கல்லூரியின் 40 மாணவர்களுக்கு**
  **₹ 3 இலட்சம்**
- **கிருஷ்ணகிரி, அரசு மகளிர் கலைக் கல்லூரியின் 16 மாணவியருக்கு**
  **₹ 1.60 இலட்சம்**



"அடிக்கடி கவலைபடாதீர்கள். தேவை எனில் கவலை படுவதற்கென ஒவ்வொரு நாளும் மாலை நேரம் முப்பது நிமிடம் ஒதுக்குங்கள். அந்த நேரம் அனைத்துக் கவலையும் குறித்துத் சிந்தியுங்கள்"

# மும்பை தொழுநோய் காலனி பள்ளிக்கு கல்வி உதவிகள்



**கணினி ஆய்வகம் ₹ 6.10 இலட்சம்**

மும்பையைச் சார்ந்த தொழுநோயாளர் காலனியில் செயல்படும் அபினவ் தன்யன் மந்திர் பொது அறக்கட்டளையைச் சார்ந்த பள்ளியில் 400 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் இக்காலணியில் வசிக்கும் பெரும்பாலானோர் தமிழகத்திலிருந்து புலம் பெயர்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்கது. கணினி மயமான இக்காலத்தில் மாணவர்களுக்கு கணினி அறிவியல் கற்பிக்க போதிய கணினிகள் இல்லை என்பதால் கணினி ஆய்வகம் அமைக்க உதவி செய்யுமாறு பள்ளி நிர்வாகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அப்பள்ளிக்கு **ரூ.6.1 இலட்சம்** மதிப்பிலான **16 கணினி**களை கொண்ட கணினி ஆய்வகத்தை வழங்கியது ஐவிடிபி நிறுவனம்.

**டின்னர் செட் ₹ 1.30 இலட்சம்**



அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு **ரூ.1.30 இலட்சம்** மதிப்பிலான **டின்னர் செட்**களை வழங்கினார் ஐவிடிபி நிறுவனத் தலைவர்.



"அதிகாலையில் எழ பழகுங்கள். வாழ்வில் வென்ற பலரும் அதிகாலையில் எழுபவர்களே."

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த பள்ளிகளுக்கு

# கணினி ஆய்வகம் & ஸ்மார்ட் போர்டுகள்

## ₹ 18.06 இலட்சம்

இன்றைய காலக் கட்டத்தில் கற்றல், கற்பித்தல் பணிகள் மாற்றமடைந்து மாணவர்கள் நவீன முறையில் கணினி ஆய்வகத்தின் மூலமும், ஸ்மார்ட் போர்டு வகுப்பறைகள் மூலமும் கல்வி பயின்று வருகின்றனர். இம்முறையை ஊக்குவிக்கும் வகையில் ஐ.வி.டி.பி நிறுவனம் பல்வேறு பள்ளிகளுக்கு **கணினி ஆய்வகம், ஸ்மார்ட் போர்டுகள், பிரிண்டர், இணைய வசதி**கள் என பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வருகிறது.



திரிபுரா, மொகர்பரா நோட்டர் டேம் ஹோலி கிராஸ் பள்ளிக்கு
**ரூ. 8.6 இலட்சம்** மதிப்பில் **கணினி ஆய்வகம்**

கிருஷ்ணகிரி
புனித அன்னாள் நர்சரி
& துவக்கப் பள்ளிக்கு
**ரூ. 4.86 இலட்சம்**
மதிப்பில்
**ஸ்மார்ட் போர்டு உபகரணங்கள்.**

கிருஷ்ணகிரி
மாவட்டம்,
வேப்பனப்பள்ளி
அரசு மேல்நிலைப்
பள்ளிக்கு
**ரூ. 21,830**
மதிப்பில்
**பிரிண்டர்.**

கிருஷ்ணகிரி
அரசு மகளிர்
கலை கல்லூரிக்கு
**ரூ. 14,620 மதிப்பில்**
**இணைய இணைப்பிற்கான நிதியுதவி.**



"தினமும் நிறைய சிரிக்க பழகுங்கள்.
அது நல்ல ஆரோக்கியத்தையும் நண்பர்களையும் பெற்று தரும்."




கிருஷ்ணகிரி மாவட்டம், கெரிகேப்பள்ளி அரசு நடுநிலைப் பள்ளிக்கு **ரூ. 1 இலட்சம்** மதிப்பிலான **கணினி ஆய்வகம், ரூ. 32,900/-** மதிப்பிலான **ஸ்மார்ட் (43" TV) டிவி** மற்றும் **ரூ. 101130/-** மதிப்பிலான **ஒலியமைப்பு** என மொத்தம் **ரூ. 2.34 இலட்சம்** மதிப்பிலான **கல்வி உதவிகள்.**

தருமபுரி மாவட்டம், உம்மியம்பட்டு அரசு நடுநிலைப் பள்ளிக்கு **ரூ. 1.4 இலட்சம்** மதிப்பில் **ஸ்மார்ட் போர்டு**






தருமபுரி மாவட்டம், அரூர் புதுவாழ்வு சிறுவர் இல்லத்திற்கு **ரூ. 50,210** மதிப்பில் **ஸ்மார்ட் டிவி.**



"நிறைய நல்ல புத்தகம் படியுங்கள். எங்கு சென்றாலும் ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள். காத்திருக்கும் நேரத்தில் வாசியுங்கள்."

# பல்வேறு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு

# கேக்குகள் ₹ 4.45 இலட்சம்

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் புத்தாண்டை முன்னிட்டு, பள்ளி குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் **9633 மாணவர்களுக்கும், 440 ஐ.வி.டி.பி பணியாளர்களுக்கும் ரூ. 4.45 இலட்சம்** மதிப்பிலான திருச்சி நகரில் புகழ்பெற்ற B.G. நாயுடு கம்பெனியில் இருந்து கேக்குகளை (இனிப்புகள்) வழங்கியது.







புனித அன்னாள் மே.நி.பள்ளி, கிருஷ்ணகிரி
**2100 மாணவிகள் - ரூ. 84 ஆயிரம்**

புனித அன்னாள் மெட்ரிக் பள்ளி, கிருஷ்ணகிரி
**650 மாணவர்கள் - ரூ. 26 ஆயிரம்**

புனித அன்னாள் உதவி பெறும் துவக்கப் பள்ளி, கிருஷ்ணகிரி
**1200 மாணவர்கள் - ரூ. 48 ஆயிரம்**

R.C ஆண்கள் துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி
**1700 மாணவர்கள் - ரூ. 68 ஆயிரம்**

NSCBAV உண்டு உறைவிடப் பள்ளி, அத்திமுகம்
**158 மாணவர்கள் - ரூ. 6 ஆயிரம்**

புனித ஜான் போஸ்கோ பள்ளி, ஓசூர்
**1300 மாணவர்கள் - ரூ. 52 ஆயிரம்**

அக்சீலியம் கல்லூரி, வேலூர்
**800 மாணவிகள் - ரூ. 32 ஆயிரம்**

புனித ஜோசப் குழந்தைகள் இல்லம், ஆரணி
**200 மாணவர்கள் - ரூ. 8 ஆயிரம்**

மாவட்ட மாற்றுத்திறனாளி பள்ளி
**500 மாணவர்கள் - ரூ. 20 ஆயிரம்**

லிட்டில் பிளவர் இல்லம், பள்ளிகொண்டா
**300 மாணவர்கள் - ரூ. 12 ஆயிரம்**

ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி, கோட்டையூர்
**575 மாணவர்கள் - ரூ. 23 ஆயிரம்**

மான்ட்போர்ட் செவித்திறன் குறையுடையோருக்கான பள்ளி, பெலகொலா, மைசூர்,
**150 மாணவர்கள் - ரூ. 6 ஆயிரம்**

ஐ.வி.டி.பி.யின் 440 பணியாளர்களுக்கு
**ரூ. 60 ஆயிரம்**



"கணிதம் சந்தோசத்தை கூட்டவோ கவலையைக் கழிக்கவோ நமக்கு கற்றுத் தருவதில்லை... ஆனால் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு என்பதை கற்றுத் தருகின்றது."

# கலை திருவிழாவில் பங்கேற்ற அரசு பள்ளி மாணவர்களுக்கு உணவு

## ₹ 2.87 இலட்சம்



அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களின் தனித்திறனைக் கண்டறியும் நோக்கத்தோடு தமிழக அரசு பள்ளி மாணவர்களிடையே கலை திருவிழாவை நடத்தியது. கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்களுக்கு, கிருஷ்ணகிரியில் உள்ள ஆண்கள் மற்றும் மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் நடத்தப்பெற்ற இந்த கலைத்திருவிழாவில் பங்கேற்ற **4500 மாணவர்களுக்கு ரூ. 2.87 இலட்சம் மதிப்பிலான உணவு, வாட்டர் பாட்டில் மற்றும் குளிர்பானங்களை** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.

# மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் பங்கேற்ற குழந்தைகளுக்கு உணவு

## ₹ 63 ஆயிரம்



கிருஷ்ணகிரி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை நடத்திய அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினவிழாவை முன்னிட்டு பர்கூரிலுள்ள ஐ.இ.எல்.சி பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் **500 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு தலா ரூ. 127/-** என மொத்தம் **ரூ.63,762/- மதிப்பில் உணவு, கேக், வாட்டர் பாட்டில் மற்றும் குளிர்பானம்** போன்றவற்றை ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.



## கிருஷ்ணகிரி
# அரசு மகளிர் கல்லூரிக்கு வகுப்பறை கட்டிடம்

**₹ 50 இலட்சம்**

இன்றைய இளையத் தலைமுறையின் சிறப்பாக
ஏழை எளிய இளம் மகளிரின் வளர்ச்சியிலும்,
அவர்களின் கல்வியிலும் அக்கறைக் கொண்ட ஐ.வி.டி.பி நிறுவனம்,
தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் துறை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ்
கிருஷ்ணகிரி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில்
ஐ.வி.டி.பி யின் **ரூ. 50 இலட்சம்** பங்களிப்புடன்
**5 வகுப்பறைகள்** கொண்ட கட்டிடத்தைக் கட்டி முடித்துள்ளது.

**ஐ.வி.டி.பி நிறுவனத்தின்
பங்களிப்புடன்
அரசின் பங்களிப்பையும் சேர்த்து
ரூ. 1 கோடி மதிப்பில்
இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது
குறிப்பிடத்தக்கது.**






"உங்கள் குழந்தைகளை உங்களுக்கு கிடைத்த மிக சிறந்த பரிசாக ( Gift ) நினையுங்கள். அவர்களுக்கு நீங்கள் தர கூடிய சிறந்த பரிசு அவர்களுடன் நீங்கள் செலவிடும் நேரமே."

# காரிமங்கலம் அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகளுக்கு ஐவிடிபியின் கல்விப் பணிகள்




**ஆங்கில இணைப்புப் பயிற்சி**

**₹ 1.03 இலட்சம்**

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயிலும் 750 மாணவிகளுக்கு, திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி பேராசிரியர்களின் துணையோடு, அடிப்படை ஆங்கில இணைப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்த பயிற்சிக்கு தேவையான பயிற்சி புத்தகங்களையும், பயிற்சி கட்டணத்தையும் ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இக்கல்வியாண்டும் அடிப்படை **ஆங்கில இணைப்புப் பயிற்சிக்கான கட்டணமாக ரூ. 54,302/- பயிற்சி புத்தகங்களுக்காக ரூ.49,350/- என மொத்தம் ரூ. 1.03 இலட்சத்தை ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கியது.**



**மாணவிகளுக்கான சீருடை**

**₹ 3.58 இலட்சம்**

மேலும் அக்கல்லூரியில் பயிலும் 3400 க்கும் மேற்பட்ட மாணவிகள் அனைவரும் ஏற்றத் தாழ்வுகளின்றி, சமத்துவ உணர்வோடு, சீருடை அணிந்து கல்லூரிக்கு வரும் பொருட்டு, இளங்கலை முதலாண்டு பயிலும் **680 மாணவிகளுக்கும் மற்றும் முதுகலை முதலாண்டு பயிலும் 125 மாணவிகளுக்கும் தலா ரூ.445/- என மொத்தம் ரூ.3.58 இலட்சம் மதிப்பிலான சீருடைகளை** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் அவர்கள் வழங்கினார்.



"தனக்கு வேண்டியதை கேட்பவன் சில நிமிடங்கள் முட்டாளாய் தெரிவான்.
தனக்கு வேண்டியதை கேட்காதவன் வாழ் நாள் முழுவதும் முட்டாளாய் இருக்க நேரிடும்."

# பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்

## ₹ 4.83 இலட்சம்



திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி
மாணவர்கள் நலன் கருதி
**ரூ. 2,66,253/-** மதிப்பிலான
குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்.



திருப்பத்தூர் மாவட்டம், பள்ளிகொண்டா
**லிட்டில் பிளவர் சிறுவர் இல்ல**த்தில் தங்கி
பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில்
**ரூ. 2,16,957/-** மதிப்பிலான
**குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்.**

# கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவியருக்கு சிற்றுண்டி

## ₹ 31 ஆயிரம்



கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியில்
அரசுப் பொதுத்தேர்வு எழுதும் பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு மற்றும்
பனிரெண்டாம் வகுப்பு மாணவியரை ஊக்கப்படுத்தும் வகையில் **ரூ. 31409/-** மதிப்பில்
**குளிர்பானம்** மற்றும் **பிஸ்கட்டுகள்** வழங்கப்பட்டது.



"காற்றை போல் அனைத்தையும் அரவணைத்தவளே, தாயாக... நெருப்பை போல் தீயதை பொசுக்க துணிந்தவளே...
பிறருக்காகவே வாழ துடிப்பவளே... என் அன்பான அம்மாவே..."



# எலத்தகிரி கொன்சாகா கல்லூரிக்கு நவீன தையல் இயந்திரம்

₹ 1.41 இலட்சம்

எலத்தகிரி கொன்சாகா கல்லூரியின் நவீன ஆடை வடிவமைப்பு துறை மாணவிகள் பயிற்சி பெறும் பொருட்டு, ஆரி வேலைபாடுகள் செய்யும் வகையில் **ரூ. 1.41 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரத்தை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

# திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி மாணவர்களுக்கு புத்தகங்கள்

₹ 1.65 இலட்சம்



**திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி**யின் மாணவர்களிடையே வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, அக்கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவ மாணவியருக்கு **ரூ. 1.65 இலட்சம்** மதிப்பிலான **புத்தகங்களை** வழங்கி ஊக்கப்படுத்தினார் ஐவிடிபி நிறுவனத் தலைவர்.






# மும்பை அலர்ட் இந்தியா தொழுநோய் பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியம்

## ₹ 9.30 இலட்சம்

அன்றாடம் தங்கள் வாழ்வில் பெரும்பான்மையான நேரத்தை தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அர்ப்பணித்து பணியாற்றும் மும்பையைச் சார்ந்த அலர்ட் இந்தியா நிறுவனத்தின் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் **ஒரு மாத ஊதியமான ரூ. 9.30 இலட்சத்தை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

## ஐவிடிபியின் இதர கல்விச் சேவைகள்

ஐ.வி.டி.பி கல்வி உதவித்தொகைகள் மட்டுமில்லாது, பள்ளிகளுக்கு தேவையான கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறது. அவ்வகையில்

- கோட்டையூர் ஐவிடிபி நேதாஜி மெட்ரிக் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு ரூ. **63,859**/- மதிப்பிலான **பாடப் புத்தகங்கள்**
- கிருஷ்ணகிரி மாவட்டம், சூலாமலை அரசு பள்ளிக்கு ரூ. **25,833**/- மதிப்பில் **கண்கானிப்பு கேமரா**
- ஓசூர் செயிண்ட் ஜோசப் கல்லூரி மாணவியரின் பயன்பாட்டிற்காக, ரூ. **21,240**/- மதிப்பிலான **நாப்கின் எரிப்பான்**
- ஏலகிரி தொன் போஸ்கோ கல்லூரி மாணவர்களுக்கு ரூ. **34,730**/- மதிப்பில் உணவு.
- இந்து கொல்லூர் அரசு நடுநிலைப் பள்ளிக்கு ரூ. **10,800**/- மதிப்பில் **பீரோ.**
- மனவாரனப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ. **25,600**/- மதிப்பில் **பீரோ.**
- திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் 15 மாணவ மாணவியருக்கு ரூ. **14,323**/- மதிப்பிலான **பிளாஸ்க்**
- வேலூர் அக்சீலியம் கல்லூரி மாணவியருக்கு ரூ. **17,000**/- மதிப்பில் உணவு.
- கொல்லூர் அரசு பள்ளிக்கு ரூ. **8,400**/- மதிப்பில் **மேசை.**

# பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு வாட்ச்கள்

# ₹ 8.06 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம் மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை மட்டுமில்லாமல், அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தங்க காதணிகள், வாட்டர் பாட்டில்கள், வாட்ச்கள் என அவ்வப்போது பல்வேறு ஊக்கப்பரிசுகளை வழங்கி வருகிறது. அவ்வகையில் தற்போது **ரூ. 8.06 இலட்சம்** மதிப்பிலான **740 வாட்ச்**களை ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் அவர்கள் மாணவிகளுக்கு வழங்கி ஊக்கப்படுத்தினார்.



ஒசூர் **ஜான் போஸ்கோ பள்ளி**யில் பயிலும் **270 மாணவிகளுக்கு,** பள்ளி ஆண்டு விழாவில் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றமையைப் பாராட்டும் வகையில் **தலா ரூ. 1091/-** என மொத்தம் **ரூ. 2.94 இலட்சம்** மதிப்பிலான **வாட்ச்கள்.**



வேலூர் **அக்சீலியம் கல்லூரி** வணிக நிர்வாகத் துறையின் வெள்ளி விழாவை முன்னிட்டு, அத்துறைச் சார்ந்த **460 மாணவிகளுக்கு தலா ரூ. 1091** என மொத்தம் **ரூ. 5.02 இலட்சம்** மதிப்பிலான **வாட்ச்கள்.**

**ஆரணி புனித ஜோசப் இல்லத்தைச்** சார்ந்த பனிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் **10 மாணவியருக்கு தலா ரூ. 1091/-** என மொத்தம் ரூ.10 ஆயிரம் மதிப்பிலான **வாட்ச்கள்.**



வானத்தை போல் பரந்த மனம் கொண்டவளே, நிலத்தை போல் சமமாக பிறரை நினைத்தவளே, நினைப்பவளே!
நீர் போல் தன்னலமின்றி தாகம் தீர்ப்பவளே.

# பள்ளிகொண்டா லிட்டில் பிளவர் இல்லத்திற்கு கல்விச் சேவைகள்



**டெஸ்க் பெஞ்சுகள் ₹ 2.27 இலட்சம்**

திருப்பத்தூர் மாவட்டம் பள்ளிகொண்டா பகுதியில் செயல்படும் லிட்டில் பிளவர் இல்லத்தில் தங்கி 300 மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அவர்கள் அமர்ந்து பயில்வதற்கு ஏதுவாக **ரூ. 2.27 இலட்சம்** மதிப்பிலான **25 டெஸ்க் பெஞ்சுகளை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

## ஊக்கப்பரிசுகள் ரூ. 60 ஆயிரம்



மேலும் அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியரல்லா பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக **ரூ. 60 ஆயிரம்** மதிப்பிலான **டின்னர் செட், போர்வை** மற்றும் **வாட்டர் பாட்டில்**களை வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.



"எந்த ஒரு புது பழக்கமும் உங்களுக்குள் முழுதும் உள் வாங்கி, அது உங்கள் வாடிக்கையாக மாற 21 நாட்களாவது ஆகும்."



# பள்ளி மாணவ மாணவியருக்கு வாட்டர் பாட்டில்கள்

**₹ 7 இலட்சம்**

சமுதாய முன்னேற்றத்திலும், மகளிர் முன்னேற்றத்திலும் வெற்றி கண்டுள்ள ஐ.வி.டி.பி நிறுவனம் கல்விச் சேவையிலும் சிறப்பாக பங்காற்றி வருகிறது. அவ்வகையில் தற்போது மாணவ மாணவியரின் உடல் நலன் கருதி அவர்களுக்கு தண்ணீர் பருகுவதற்காக, பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த **8745 மாணவ மாணவியருக்கு வாட்டர் பாட்டில்**களை ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கி ஊக்கப்படுத்தினார். **இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 7 இலட்சம் ஆகும்.**

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியின் **2100 மாணவிகளுக்கு** | **₹ 1.68 இலட்சம்** |
| எலத்தகிரி புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியின் **1590 மாணவ மாணவியருக்கு** | **₹ 1.27 இலட்சம்** |
| கிருஷ்ணகிரி R.C. ஆண்கள் துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியின் **1600 மாணவர்களுக்கு** | **₹ 1.28 இலட்சம்** |
| ஒசூர் புனித ஜான் போஸ்கோ பள்ளியின் **1305 மாணவியருக்கு** | **₹ 1.04 இலட்சம்** |
| கிருஷ்ணகிரி புனித அன்னாள் துவக்கப் பள்ளியின் **1200 மாணவிகளுக்கு** | **₹ 96 ஆயிரம்** |
| பர்கூர் செயின்ட் ஜோசப் உடல் மற்றும் சமூக நல மையம் **50 மாணவ மாணவியருக்கு** | **₹ 4 ஆயிரம்** |
| திருப்பத்தூர் மேரி இமாகுலேட் பள்ளியின் **650 மாணவியருக்கு** | **₹ 52 ஆயிரம்** |
| ஆரணி புனித ஜோசப் குழந்தைகள் இல்லத்தின் **250 மாணவர்களுக்கு** | **₹ 20 ஆயிரம்** |



"தினமும் நல்ல இசையைக் கேளுங்கள். துள்ளலான நம்பிக்கை தரும் இசை, புன்னகையையும் உற்சாகத்தையும் தரும்."

# அன்பின் பகிர்வாக கிறிஸ்து பிறப்பு விழா

**₹ 3.90 இலட்சம்**

அயலானுக்கு அன்பு செய்வதும், இல்லாதவரோடு பகிர்வதுமே உண்மையான கிறிஸ்துமஸ் என்பதை உணர்ந்த ஐ.வி.டி.பி நிறுவனம் விளிம்பு நிலையில் வாழும் மக்களிடையே கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடி மகிழ்ந்தது. அப்போது,



தர்மபுரியில்
**260 மாற்றுதிறனாளிகளுக்கு**
**ரூ. 85,250/-** மதிப்பிலான
**உணவுத் தொகுப்புகள்**




ஆரணி **செயின்ட் ஜோசப் விடுதி குழந்தைகளுக்கு ரூ. 1.05 இலட்சம்** மதிப்பிலான **புத்தகப்பை, குளிர்பானம், கேக்குகள்**



பர்கூர் **செயின்ட் ஜோசப் உடல் மற்றும் சமூக நல மையத்தை** சார்ந்தவர்களுக்கு **ரூ. 2 இலட்சம்** மதிப்பிலான **உணவுத் தொகுப்பினையும்** வழங்கி அவர்களோடு கிறிஸ்து பிறப்பு விழாவினை கொண்டாடியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

## சிறுவனின் அறுவைச்சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 1 இலட்சம்



அனுமந்தபுரம் கிளை, நர்மதா மகளிர் மன்றத்தில் உறுப்பினராக இருந்து வரும் ரமணி என்பவரின் மகனான துவாரகேஷ் எனும் 11 வயது சிறுவனுக்கு விபத்தினால் இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவர்களுக்கு உதவி செய்ய யாரும் முன்வராமல் திக்கற்று தவித்த நிலையில், அச்சிறுவனின் அறுவைச்சிகிச்சைக்காக ரூ. 1 இலட்சத்தை ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் கொடுத்து உதவினார்.

**சிறுவன் கோயம்புத்தூரில் உள்ள கங்கா மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று தற்போது நலமுடன் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.**



"புது மனிதர்களிடமும் தயங்காது பேசுங்கள். அவர்களிடமிருந்து கூட உங்களை ஒத்த சிந்தனையும் நல்ல நட்பும் கிடைக்கலாம்."

## இனியவருக்கு 75ஆவது பிறந்தநாள் வாழ்த்து

ஏற்றம் தரும் மாற்றமாய்
எழில் தரும் கூட்டமாய்
எல்லாரும் மகிழவே
இனிமை தரும் திருவிழாவே
இனியவர் குழந்தை பிரான்சிஸ் அவர்களின்
75ஆவது பிறந்தநாள் விழா!

எல்லாருக்கும் எல்லாமுமானாய்
இருப்பதை அனைவருக்கும் ஈந்தாய்
ஈர நெஞ்சினனாய் ஈ கின்ற
ஈகையைக் கண்ட இறைவன்
ஈந்தார் 75 அகவையை....
இறைவனுக்கு இனிய நன்றி...
முத்துவிழாவை நோக்கிய நின் பயணம்
முத்தான பயணம்
நூற்றாண்டு காண வேண்டும்
நோய் நொடியின்றி வாழ வேண்டும்



கடையெழு வள்ளல்களுக்கு பின்
உதித்த கருணை வள்ளலே
பிரான்சிஸ் என்றதாலே
பிறரன்பு பணியை ஏற்றீர்
பிறரின் துயர் துடைத்தீர்
ஏழை பிள்ளைகளின் கல்வி வளர்த்தீர்

நான்கு மாவட்ட மக்களின்
அகலாத அல்லல்களையும்
அவலங்களையும் தீர்த்த ஆதவரே!
ஆதவனாய் அவதரித்தவரே!

சமூக பணியாளரே
ஏழை எளியோர் ஏற்றம் பெற
கிருஷ்ணகிரிக்கு கிடைத்த அட்சய பாத்திரமே
அளப்பரிய பணிகள் தொடரட்டும்
நின் புகழ் பரவட்டும்

வாழ்க பல்லாண்டு
வளர்க உம் தொண்டு
இன்னும் பல பிறந்த நாட்கள் காண
இதயபூர்வமானவருக்கு
இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

வாழ்த்துடன்... அருள் சகோ. **ஆசை அலங்காரம்**

## அம்மா!

இறைக்கே இணையாகி வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு இலக்கணமானவள் தாய்!
ஈரைத்திங்கள் வலி தாங்கி
மறுபிறவி கையில் ஏந்தி
ஓர் உயிரை ஈன்றெடுக்கும் சுமை தாங்கி அம்மா!



பெற்ற பிள்ளைக்குப் பெயர் சூட்டி
தாலாட்டி சோறூட்டி வளர்க்கும்
மணிமகுடம் அணியா அரசி அம்மா!
அம்மா எனும் வார்த்தை!
வெறும் உச்சரிப்பு வார்த்தை அல்ல!
அனைவராலும் நேசிக்கப்படும் உன்னதமான வார்த்தை!

ஆசை ஆசையாய் சுமந்து!
அணு அணுவாய் வளர்த்து!
அழகிய மழலையாக!
உலகிற்கு நம்மை அறிமுகப்படுத்தியவள்!
நமக்கு உலகத்தை அறிமுகப்படுத்தியவள்!

உயிர் எழுத்தில் 'அ' எடுத்து!
மெய் எழுத்தில் 'ம்' எடுத்து!
உயிர்மெய் எழுத்தில் 'மா' எடுத்து!
அழகு தமிழில் கோர்த்தெடுத்த முத்துச்சரம் 'அம்மா'!

அம்மா!
வார்த்தைகளே இல்லாத வடிவம் நீ!
அளவுகோலே இல்லாத அன்பு நீ!
சுயநலமே இல்லாத இதயம் நீ!

பஞ்சம் பசி பட்டினி மறந்து
தங்க இடமில்லாமல் உண்ண உணவில்லாமல்
உன் தாய்ப்பால் தான் அமிர்தம் என்று
பசி போக்கினாயே அம்மா!

அம்மா! நீ இல்லா இவ்வுலகில்
என்னால் வாழ முடியுமா? என்று தெரியவில்லை
ஆனாலும் அம்மா!
உன் நினைவுகளோடு வாழ முயற்சி செய்கிறேன்...!

**கே. சங்கீதா,** ஒடசல்பட்டி



"உங்கள் குடும்பத்தின் முக்கிய நிகழ்வுகளை அவசியம் புகைப்படம் எடுங்கள்.
பிற்காலத்தில் அந்த இனிய நாட்களுக்கு நீங்கள் சென்று வர அவை உதவும்."

## ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் விபரம் (மார்ச் 2023 வரை)

- ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர்
- **ஐ.வி.டி.பி. கிளைகள் : 84** ✿ **சுய உதவிக்குழுக்கள் : 15,794** ✿ **சுய உதவிக்குழு உறுப்பினர்கள் : 2,79,992**
- **ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு : 1153.03 கோடி**
- **ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு : 816.35 கோடி**

## கடன் விபரம்

| விவரம் | மார்ச் 2022 வரை | ஏப்ரல் 2022– மார்ச் 2023 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 5,258.51 கோடி | ₹ 912.63 கோடி | ₹ 6171.14 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள் கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ₹ 4,039.13 கோடி | ₹ 356.69 கோடி | ₹ 4,395.82 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 243.47 கோடி | ₹ 52.07 கோடி | ₹ 295.54 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 230.03 கோடி | ₹ 13.45 கோடி | ₹ 243.48 கோடி |
| **மொத்தம்** | ₹ 9,771.14 கோடி | ₹ 1,334.84 கோடி | ₹ 11,105.98 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

| விவரம் | மார்ச் 2022 வரை | ஏப்ரல் 2022– மார்ச் 2023 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி | | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி | | ₹ 2.00 கோடி |
| மருத்துவமனை, சிறைகள் தொழுநோயாளிகள், முதியோர் இல்லம், ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ₹ 2.22 கோடி | ₹ 40.91 இலட்சம் | ₹ 2.63 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ₹ 47.36 கோடி | ₹ 6.63 கோடி | ₹ 53.99 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள் : குடிசை தீ விபத்து நிதியுதவி, கோசலை விருது, ஊக்குனர் பரிசு ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் பரிசுகள், தையல் பயிற்சிகள், உறுப்பினர்களுக்கான வெள்ள நிவாரணப்பணி, விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை | ₹ 7.56 கோடி | ₹ 1.53 கோடி | ₹ 9.09 கோடி |
| பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை, மருத்துவச் செலவுகள் | ₹ 6.84 கோடி | ₹ 1.07 கோடி | ₹ 7.91 கோடி |
| ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி, கோட்டையூர், ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ₹ 15.43 கோடி | ₹ 12.03 இலட்சம் | ₹ 15.55 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ₹ 18.53 கோடி | ₹ 2.97 கோடி | ₹ 21.50 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ₹ 47.74 இலட்சம் | ₹ 7.37 இலட்சம் | ₹ 55.11 இலட்சம் |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா, நீலகிரி, சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.91 கோடி | | ₹ 4.91 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ₹ 3.72 கோடி | | ₹ 3.72 கோடி |
| இருளர் நிவாரணப் பணிகள் | ₹ 1.22 கோடி | | ₹ 1.22 கோடி |
| **மொத்தம்** | ₹ 115.26 கோடி | ₹ 12.80 கோடி | ₹ 128.06 கோடி |


# ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்

**கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் மாவட்டங்கள்**

ஐ. வி. டி. பி. இல்லம், 9ஈ சாந்தி நகர் 3ஆவது கிராஸ், கிருஷ்ணகிரி-635 001

Tel : 04343-232 129, 236 420 e-mail : francis@ivdpkrishnagiri.org Web: www.ivdpkrishnagiri.org